අධ්‍යාපන, විද්‍යා හා තාක්ෂණ අමාත්‍යාංශය
கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
Ministry of Education, Science and Technology
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்லை, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/60/16/08/2024/2-1 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024. 10-01

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,

**இலங்கை அதிபர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்களை தரம் I இற்கு பதவி உயர்த்துதல்.**

இல. 1885/31 மற்றும் 2014.10.22ம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அச் சேவைப் பிரமாணக் குறிப்பில் பின்னராக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைய 2012.01.24ம் திகதியன்று இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 இற்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

**02. இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்வதற்கு கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்**

அ) கீழ் வரும் தகைமைகளைக் கொண்டிருக்கும் உத்தியோகத்தர்கள் இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்வர்.

(i) பதவி உயர்வுக்கு தகுதி பெறும் திகதிக்கு இலங்கை அதிபர் சேவையின் தரம் II இல் ஆகக் குறைந்தது 06 வருட முனைப்புடன் கூடிய திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் 06 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

(ii) உரிய திகதிக்கு 2ம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். (உரிய காலத்தினுள் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையவில்லை எனின் சலுகை பெற்றிருத்தல் வேண்டும்)

(iii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் 01/2020 இற்கமைய ஒழுக்காற்று ரீதியில் தண்டனைகளைப் பெறாதவராக இருத்தல்.

(iv) அனுமதிக்கப்பட்ட செயல்திறன் மதிப்பீட்டு நடைமுறைகளுக்கமைய பதவி உயர்வுக்குரிய திகதிக்கு முன்னரான ஆறு (06) வருடங்களுக்கு திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயல்திறனை வெளிக்காட்டியிருத்தல்.

(v) பதவி உயர்விற்கு தகுதி பெறும் திகதிக்கு ஆகக் குறைந்தது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தகைமையையேனும் பூர்த்தி செய்திருத்தல். (சான்றிதழ் மற்றும் அதன் பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் ஆகிய 2 ஐயும் சமர்ப்பித்தல் வேண்டும்.)

a. கல்விமானி பட்டம் (B.Ed)
b. பட்டப் பின் கல்வி டிப்ளோமா (PGDE)
c. பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா (DSM)
d. பட்டப் பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (PGDEM)

(vi) இயலளவு விருத்திப் பயிற்சிப் பாடநெறி 2 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ) மேலே 02 இல் உள்ள தகைமைகளைக் கொண்டுள்ள தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய (இணைப்பு 01 மற்றும் இணைப்பு 02) பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளரது பரிந்துரை சகிதம்,

இ) மேலே 02 இல் உள்ள தகைமைகளைக் கொண்டுள்ள மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய (இணைப்பு 01 மற்றும் இணைப்பு 02) பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விச் செயலாளரின் பரிந்துரை சகிதம்,

"உதவிச் செயலாளர், அதிபர் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. அத்துடன், தங்களது மாகாணத்தினுள் சேவையாறும் அனைத்து அதிபர் தரமுடையவர்களும் இலங்கை அதிபர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய பதவி உயர்வு பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க வேண்டிய செயன்முறை தொடர்பில், அறியப்படுத்துமாறு தெரிவித்துக் கொள்வதுடன். அதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் மற்றும் பதவிஉயர்வு மாதிரி விண்ணப்பப் படிவம் என்பன www.moe.gov.lk எனும் முகவரியினூடாக பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்பதையும் தெரிவித்த்துக் கொள்கின்றேன்.

ஜே.எம். திலகா ஜயசுந்தர
செயலாளர்

பிரதிகள்:- மாகாணக் கல்விப் பணிப்பாளர், .......................... மாகாணம் } அனைத்து கல்வி வலயங்களையும் அறியப்படுத்துவதற்காகவும், தகவலுக்காகவும்